## திருகோணமலை மாவட்டச் செயலகம்

## திருகோணமலை மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1. மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(i) வறுமையைக் குறைக்கும் ஆரம்ப நடவடிக்கைகளை முகாமை செய்தலும் விஸ்தரித்தலும்

(ii) இடர் நிவாரண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை நிர்வகதித்தல்

(iii) மாவட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் அமுல்ப்படுத்தலும்

(iv) தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

(v) மாவட்ட விசேட செயற்திட்டங்களை நிர்வகித்தலும் வழிகாட்டலும்

(vi) வருமானங்களைச் சேகரித்தல்

### 2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(i) பட்டிணமும் சூழலும்

(ii) கந்தளாய்

(iii) தம்பலகாமம்

(iv) குச்சவெளி

(v) கிண்ணியா

(vi) கோமரன்கடவள

(vii) மொரவெவ

(viii) சேருவில

(ix) மூதூர்

(x) வெருகல்

(xi) பதவி சிறீபுர

## 4.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் மீதான இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்களுக்கும் 4.5 இலிருந்து 4.15 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கும் அமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(i) மாவட்டச் செயலகத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் தலைப்பு - 271 ஒதுக்கீட்டுக் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும்

நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| சொத்துக்கள் பதிவேடு | 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பதிவேடு பேணப்பட்டிருக்காமை |
| சேதங்கள் பதிவேடு | நி.பி 214 | பதிவேடு பேணப்பட்டிருக்காமை |
| செலவுப் பதிவேடு | நி.பி 447 | முறைப்படியாகப் பேணப்பட்டிருக்காமை |

(iii) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பதில்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் அந்த ஐய வினாக்களின் கணிப்பிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்களுக்குரிய பெறுமதி ரூபா 47,023,779 ஆக இருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) தலைப்பு 271-1-1-1401 மற்றும் 271-1-2-1402 ஆகிய 02 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 50,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 5 செலவு விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் 20% இற்கும் 100% இற்கும் இடைப்பட்ட வீச்சுடைய சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்டச் செயலகத்திடம் ரூபா 6,756,986 தொகையான மீதி காணப்பட்டதுடன் அது 2011 சனவரி 17 ஆந் திகதி தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

## 4.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| நிதிப் பிரமாணம் | | |
| (அ) 177(1) | 957,280 | குச்சவெளி பிரதேச செயலகத்தில் பணத்தினை வங்கியில் வைப்புச் செய்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) 260 | 74,705 | கொடுப்பனவு உத்தியோகத்தரினால் பணம் பெறுபவர் அடையாளம் காணப்பட்டு பணம் பெறுபவருக்கு காசோலைகள் வழங்கப்படவேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது வெருகல் பிரதேச செயலகத்தில் காசோலைகள் விடயத்துக்குப் பொறுப்பான இலிகிதரிடம் வழங்கப்பட்டிருந்தது. |

## 4.7 வங்கி கணக்குச் செயற்பாடுகளின் குறைபாடுகள்

### செம்மையாக்கப்பட வேண்டிய மீதி

2010 திசெம்பர் மாதத்திற்காக 11 பிரதேச செயலகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மையாக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| செம்மையாக்கல்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|
| | 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 3 ஆண்டுகளுக்கு குறைய | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 158,028 | 443,080 | 601,108 |

## 4.8 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ரூபா 211,869 பெறுமதியான 38 காசோலைகள் பணம் பெறுபவருக்கு வழங்கப்படாது கணக்காய்வுத் திகதியான 2010 நவம்பர் 08 ஆந் திகதி வரையும் தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் விடய இலிகிதரின் பொறுப்பில் வைத்திருக்கப்பட்டன. இக்காசோலைகள் வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக தொடர்ச்சியாக வங்கி இணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டு முன்கொண்டுவரப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 4.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) எழுதுகருவிகள் பற்றாக்குறை**

08 பிரதேச செயலகங்களில் ரூபா 71,937 கூட்டுமொத்தமான எழுதுகருவிகளின் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டது.

## 4.12 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட செயற்திறனின்மைகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

I. கிண்ணியா பிரதேச செயலகத்திற்கு கிடைத்த முறைமையினை இனங்கண்டு கொள்ளாது 121 பதிவேட்டுப் பொருட்கள் பதிவேட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

II. குச்ச வெளி பிரதேச செயலகத்தில் 28 தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டுகளிற்கும் 16 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலமாக வைத்திருக்கப்பட்டு அவற்றினை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

III. மொறவெவ பிரதேச செயலகத்தில் 17 பதிவேட்டுப் பொருட்கள் பொருட்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

IV. தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்த முறைமை இனங்காணப்படாது 52 பதிவேட்டுப் பொருட்கள் பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 4.13 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**மூதுார் பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் - தோப்பூர்**

i. இந்த அலுவலகத்திற்காக மூன்று உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களினால் போதியளவு கடமைகள் நிறைவேற்றப்படவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட

(iii) நி.பி 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை வலுப்படுத்துவதற்கு அல்லது நாளது வரையாக்குவதற்கு 2003 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

**(ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவினை அமுல்ப்படுத்துதல்**

---

PF/PE 7 ஆம் இலக்க 2000 மார்ச் 15 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் மற்றும் 1AI/2000/1 ஆம் இலக்க 2000 யூன் 12 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் கணக்காய்வுத் திகதியான 2011 ஏப்ரல் 18 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.